விடுநர்

திரு.அ.சண்முக சுந்தரம், இ.ஆ.ப.,
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம், வேலூர்-9.

பெறுநர்

அனைத்து துறை மாவட்ட அலுவலர்கள்,
வேலூர் மாவட்டம்.

ந.க.எச்2.16342/2019 நாள்:14.09.2019

அய்யா/அம்மையீர்,

பொருள்: தேர்தல் - சிறப்பு சுருக்க திருத்தம் 2020 – 01.01.2020-ஐ தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்தல் - வாக்காளர்கள் விவரம் சரிபார்த்தல் திட்டம் - வழிமுறைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: அரசு கடிதம் எண்.16000/2018-16, பொது(தேர்தல்-1)த் தேர்தல் நாள் 10.09.2019.

======

இந்திய தேர்தல் ஆணையம், வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தம்-2020-இல் ஒரு நிகழ்வாக 01.09.2019 முதல் 30.09.2019 வரை வாக்காளர் விவரங்கள் சரிபார்ப்பு திட்டம் செயல்முறைக்கு வரப்பெற்றுள்ளது. இப்பணியை சிறப்பாக செவ்வனே செய்வதற்கு ஏதுவாக மாவட்ட ஆட்சியர் தலைமையில் 16.09.2019 அன்று காலை 10.00 மணியளவில் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் அனைத்து அலுவலர்களும் அவர்தம் பதிவு மற்றும் அவர் குடும்பத்தார் பதிவுகளை பிரத்யேக செயலி மூலம் சரிபார்க்க உள்ளனர். இதன் தொடர்ச்சியாக வேலூர் மாவட்டத்தில் ஒரே நேரத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் / பள்ளிகள் / கல்லூரிகள் ஏனைய அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் அனைத்து அரசு ஊழியர்களும் 19.09.2019 அன்று காலை 11.00 மணியளவில் ஆண்ட்ராய்டு / ஆப்பிள் கைபேசி மூலமாக "VOTER HELP LINE" என்ற செயலியை தரவிறக்கம் செய்து தனியர் மற்றும் அவர் தம் குடும்பத்தார் விவரங்களை சரிபார்த்திட அனைவரின் வாக்காளர் அடையாள அட்டை / நகல் எடுத்து வர பணித்து மேற்படி தினத்தில் சரிபார்ப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும், அப்போது தவறான பதிவுகள் ஏதேனும் இருப்பின் செயலி மூலமே திருத்தம் மேற்கொள்ள பதிவுகள் செய்ய வேண்டும். அவர் தம் குடும்பத்தில் ஏதேனும் உறுப்பினர் விடுபட்டிருப்பின் சேர்த்திடவும், கைபேசி எண் இணைத்திடவும், குடும்ப உறுப்பினர்களை ஒருங்கிணைக்கவும், குடும்பத்தார் எவரேனும் திருமணம் மற்றும் பிற காரணங்களுக்காக நிரந்தரமாக வெளியூர் சென்றிருப்பின் / இறந்திருப்பின் அவர்களின் பெயர்களை நீக்கம் செய்திடவும், ஏதுவான பதிவுகளை கைபேசி செயலி மூலம் மேற்கொள்ள வேண்டும். இதில் எந்த ஒரு அரசு ஊழியரும் விடுபடாத வகையில் அவரவர் பதிவுகளை சரிபார்ப்பு பணி மேற்கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டும். இது தொடர்பான கீழ்வரும் படிவத்திலான அறிக்கை மற்றும் இந்நிகழ்வு நடைபெற்றது தொடர்பான புகைப்படங்களையும் 20.09.2019 அன்று மாலை 5.00 மணிக்குள் deo_vellore@yahoo.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**அறிக்கை படிவம்**

Name of the Department/Office :

Dated: .09.2019

| Sl.No. | Name of the Office/PSU with address | No. of Officials /Staff working | No. of verified and authenticated |
|---|---|---|---|
| | | | |

இணைப்பு: துண்டுப்பிரசுரம்.

தங்கள் உண்மையுள்ள,

(ஒ/ம்.)அ.சண்முகசுந்தரம்,
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்-9.

//உத்தரவுப்படி//

14/9/19

தனி வட்டாட்சியர்(தேர்தல்),
வேலூர்-9.

நகல்: தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு செயலர், பொது(தேர்தல்-1)த்துறை, தலைமைச்செயலகம், சென்னை.

Scanned by CamScanner